# மஹாவம்சம் : ஸ்ரீலங்கா வரலாறு

தமிழில்
சாந்திப்பிரியா

ஆங்கிலத்தில்
ஜார்ஜ் டர்னர் மற்றும் வில்லியம் கீஜர்

பின்னர் மாற்றி எழுதியது
மேபில் ஹேனஸ் போடே



## 04: இரண்டாம் ஆலோசனை சபை

### இரண்டாம் தர்மசங்கயானம்

அஜதசட்டுவின் (*Ajatasattu*) மகன் உதயபத்தகா (*Udayabhaddaka*) என்பவர் தன்னுடைய தந்தையை கொலை செய்து விட்டு பதவியை கைப்பற்றி பதினாறு வருடங்கள் ஆட்சி செய்தார். அடுத்து உதயபத்தகாவின் மகன் அனுருத்தகா (*Anuruddhaka*) என்பவரும் தன்னுடைய தந்தையைக் கொன்று விட்டு ஆட்சியில் அமர்ந்தார். அனுருத்தகாவின் மகன் முன்டாவும் (*Munda*) அது போலவே தன்னுடைய தந்தையைக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றினார். இப்படியாக எட்டு வருடங்கள் அந்த குடும்பத்தில் இருந்த கொடுமைக்கார மகன்கள் அவரவர் தந்தைகளை கொலை செய்து விட்டு ஆட்சியில் அமர்ந்தனர்.

அடுத்து முன்லா (*Munla*) என்பவர் தன் தந்தை நாகடசாகாவை (*Nagadasaka*) கொன்று விட்டு இருபத்தி நான்கு வருடங்கள் ஆட்சி செய்தார். அதைக் கண்டு வெகுண்டெழுந்த மக்கள் இந்த மன்னர்களுடைய வம்சம் ஒரு கொலைகாரக் குடும்பம் மட்டும் அல்ல, அவர்கள் தேசத் துரோகிகள் எனவும் முடிவு செய்து நாகடசாகாவை நாடு கடத்தி விட்டு, சுசுனகா (*Susunaga*) என்பவரை ஆட்சியில் ஏற்றினர். அந்த மன்னனும் பதினெட்டு ஆண்டுகள் நேர்மையாக ஆட்சி செய்தார். அவரைத் தொடர்ந்து அவனுடைய மகனான கலசோகா (*Kalasoka*) என்பவரும் இருபத்தி எட்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவருடைய பத்தாவது ஆண்டு ஆட்சியில் சம்புத்தரின் நூற்றாண்டு கழிந்தது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அப்பொழுது பீகாரில் வைசாலியில் இருந்த வாஜ்ஜி (*Vajji* ) என்ற இனத்தவர் பத்து கட்டளைகளுக்கு எதிரான - உப்புப் போடாத பண்டங்களை, விலங்குகளின் கொம்புகளினால் செய்யப்பட்ட பாத்திரங்களில் போட்டு, அதில் உப்பு போட்டு பதப்படுத்துவது, அனுமதிக்கப்பட்ட நேரம் தாண்டிய பின்னும் இரண்டு விரல் அகலத்துக்கு சூரிய ஒளியின் ஒளியின் நிழல் விழும் வரை மதிய உணவை உண்பது, ஒரு இடத்தில் உணவு அருந்தி விட்டு அடுத்த கிராமத்திற்கு சென்ற பின் அங்கும் உணவருந்த அழைத்தால் மறுக்காமல் சாப்பிடுவது, உள்ளூர் புத்த பிட்சுக்களின் அழைப்பை ஏற்று விருந்து உண்பது, புத்த பிட்சுக்களின் முன் அனுமதி இன்றி வேலைகளை செய்த பின் அனுமதி பெற்றுக் கொள்வது, தங்களுடைய குருமார்கள் செய்த வேலைகளை முன் உதாரணமாகக் கொண்டு சில காரியங்களை தாமே செய்வது, உணவு அருந்திய பின் அதற்கும் மேலும் கடையாத பாலை அருந்துவது, பனை மரத்துக் கள் அருந்துவது, வரையுறுக்கப்பட்ட அளவில் இல்லாத ஆசனங்களில் அமருவது, மற்றும் வெள்ளி, தங்கம் போன்றவற்றை தானமாகப் பெற்றுக் கொள்வது - என அவர்கள் கடைபிடித்து வந்த கொள்கைகளை கொஞ்சமும் வெட்கம் இன்றி நியாயப்படுத்திக் கொண்டு இருந்தனர்.

அந்த செய்தி வாஜ்ஜி நகரத்திற்கு வருகை புரிந்திருந்த தேரா யாசாவிற்குக் (*thera Yasa*) கிடைத்தது. ஒருவரை பார்த்த மட்டிலேயே அவரைப் பற்றி உணர்ந்து கொள்பவர், அனைத்து விஷயத்தையும் துல்லியமாக அறிந்து கொள்பவர், எங்கு என்ன நடக்கின்றது என்பதை உணர முடிந்தவர், அசாபாசத்தைத் துறந்தவர் - என நான்கு சிறப்பான பெருமைகளை அவர் பெற்றிருந்தார். அவர் போலித்தனமான

## -30-

புத்த பிட்சுக்கள் கூடி இருந்த இடத்திற்குச் சென்றார். அவர் சென்றிருந்த பொழுது அவர்கள் அங்கு ஒரு பெரிய தண்ணீர் நிறப்பும் பாத்திரம் ஒன்றை வைத்து அங்கு வந்து கொண்டு இருந்த உள்ளூர்வாசிகளிடம் அவரவர் மனதிற்கேற்ப எத்தனை பாஹாபாணாவை ( *அந்த காலத்தில் புழக்கத்தில் இருந்த வெள்ளி நாணயத்தின் பெயர். அதன் அளவைப் பொறுத்து அதன் மதிப்பு கணக்கிடப்பட்டு வந்தது* ) வேண்டுமானாலும் அங்குள்ள சகோதரர்களின் உபயோகத்திற்கு ( *புத்த பிட்சுக்கள்* ) போடலாம் என அறிவித்திருந்தனர். அதைக் கண்ட தேரா அப்படிப் பணம் பெறுவது பாபச் செயல் என அறிவுறைக் கூறி பணம் போட வந்தவர்களைத் தடுக்கத் துவங்க, மாற்று கருத்து *கொண்ட* பிட்சுக்கள் அவருக்கு பாடிசாரணீயகாமினா (*Patisaraniyakamina*) என்ற நூலில் கூறப்பட்டு உள்ளதைப் போன்ற தண்டனை தருவோம் என மிரட்டினர். அவர்களுடைய எதிர்பை சற்றும் பொருட்படுத்தாமல் தன்னுடன் இன்னொருவரையும் அழைத்துக் கொண்டு நகருக்குள் சென்று தாம் கூறுவதே தர்ம வழி என்று எடுத்துரைத்து மக்களிடம் உண்மை நிலையை நியாயப்படுத்தத் துவங்கினார்.

அதைக் கண்டு கோபமுற்ற மாற்று கருத்து கொண்ட பிட்சுக்கள் அவர் வீட்டை சுற்றி முற்றுகை இட்டு அவரை அங்கிருந்துத் அடித்துத் துரத்த முயன்ற பொழுது அவர் தாம் பெற்றிருந்த சித்தியினால் ஆகாயத்தில் பறந்து கோசம்பி நாட்டை சென்றடைந்தார். அங்கு பாவா (*Pava*) மற்றும் அவன்தி (*Avanti - தற்பொழுதைய உஜ்ஜயினி தலம்*) என்ற இடங்களில் இருந்த புத்த பிட்சுக்களிடம் தவறான கொள்ளையை கடைபிடித்து வரும் பிட்சுக்களின் நடவடிக்கைகளைப் பற்றிய செய்தியை தெரிவிக்க அதை முறியடிக்க அவர்கள் உடனே தம்முடைய நம்பிக்கையான

பிக்குக்களை அங்கு அனுப்பினர். அதன் பின் அந்த தேரா அஹோகங்கா (*Ahoganga*) என்ற மலைப் பகுதிக்கு தானே சென்று சம்புதா சானவாசி (*Sambhuta Sanavasi*) என்ற தேராவிடமும் நடப்பு நிலைகளைப் பற்றிய செய்தியைக் கூறினார்.

இதற்கிடையே ஆசாபாசங்களை விட்டொழித்து பாவாவில் இருந்த அறுபது பிட்சுக்களும், அவன்தியில் இருந்த எண்பது பிட்சுக்களும் அவரைக் காண அஹோகங்கா மலைப் பகுதிக்குச் சென்றனர். அவன்தி மற்றும் பாவாவில் இருந்து வந்திருந்த பிட்சுக்களையும் உள்ளூரில் இருந்த பிட்சுக்களையும் சேர்த்து சுமார் தொண்ணூராயிரம் *(90,000)* பிட்சுக்களின் கூட்டம் அங்கிருந்தது. அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்தியாவின் மேற்குப் பகுதியில் தக்கசீலாவின் அருகில் சொரய்யா (*Soreyya*) என்ற இடத்தில் இருந்த ரேவாதா (*Revata*) என்ற தேராவிடம் சென்றனர். அந்த தேரா மிகவும் புத்தி கூர்மையானவர், வயதில் மூத்தவர். அவர்கள் கூறியதைக் கேட்டவர் சற்றும் தாமதிக்காமல் அவர்களுடன் புறப்பட்டு வேசாலி *(Vesali)* வழியாக எங்கும் நிற்காமல் விரைவாக சஹஜாடி (*Sahajati*) என்ற இடத்தை சென்றடைந்தார்.

இதற்கு இடையில் அங்கிருந்த தேரா சல்ஹா (*thera Salha*) என்பவர் அனைத்து விஷயங்களையும் கேட்டறிந்தப் பின் பாவாவில் இருந்த பிட்குக்களின் போதனா முறையே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார். பிரும்மா என்ற கடவுளும் அவர் முன் தோன்றி " உன் கருத்தில் நிலையாக நிற்க வேண்டும்" என்று அறிவுறுத்த அவரும் தாம் தம்முடைய கொள்கையில் இருந்து மாறு படமாட்டேன் என உறுதி கூறினார்.

## -32-

இதற்கிடையில் பல்வேறு பரிசுப் பொருட்களுடன் வந்திருந்த மாற்று கருத்துடைய பிட்குக்கள் தந்த பரிசுக்களை தேரா ரேவா ஏற்க மறுத்ததுடன் அப்படி கொடுக்கப்படும் பொருட்களை தூயவர்கள் ஏற்கக் கூடாது எனவும் கூறினார். ஆகவே கோபமுற்ற அந்த பிட்குக்கள் அங்கிருந்து விசாலீ வழியாக தற்பொழுது பீகாரில் உள்ள பாடலிபுரம் என்ற புப்பஹுபுராவிற்கு (*Pupphapura*) சென்று அங்கிருந்த மன்னன் கலசோகாவிடம் (*Kalasoka*) ‘வாஜ்ஜியில் *(Vajji)* எங்களுடைய புனிதர் நினைவிடமான மஹாவானவிகாரில் *(Mahavana-Vihara)* நாங்கள் வசிக்கின்றோம். உங்களுடைய நாட்டில் இருந்து சில பிக்குக்கள் எங்கள் இருப்பிடத்திற்கு வந்து நாங்கள் உங்களுடைய இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளப் போகின்றோம் என பயமுறுத்துவதால் , அவர்கள் எங்கள் இருப்பிடத்திற்கு வருவதற்கு நீங்கள்தான் தடை விதிக்க வேண்டும். எங்கள் எதிரில் எந்த தீர்வுக்கும் அவர்கள் இணங்க மாட்டார்கள்’ என பொய்களைக் கூறி சற்றும் வெட்கம் இன்றி அவருடைய தலையீட்டை கோரினர். இப்படியாக மன்னனிடம் தவறான தகவலை தந்து அவரை திசை திருப்பியவர்கள் வேசாலிக்குத் திரும்பிச் சென்றனர். ஆனால் அங்கு சஹஜாடியிலோ தேரா ரேவாவின் தலைமையில் கூடிய பதினோரு லட்சத்து தொண்ணூராயிரம் *(11,90,000)* புத்த பிக்குக்கள் அந்த விவாதத்திற்கு நல்ல முடிவு கண்டிட வேண்டும் என தீர்மானித்திருந்தனர்.

அதன் பிறகு அந்த அரசன் அந்த விவாதத்துக்கு ஒரு முடிவு காணுமாறு தன்னுடைய மந்திரிகளை அனுப்பினார். ஆனால் வந்தவர்களை வழியில் வந்த தேவர்கள் திசை திருப்பி விட,

வேண்டிய இடத்தை விட்டு விலகி அவர்கள் வேறு எங்கோ சென்று விட்டனர். அன்று இரவு அந்த மன்னனின் கனவில் லோஹகும்பினி (*Lohakumbhi*) எனப்படும் இடத்தில் இருந்த நரகத்தில் தான் தள்ளப்பட்டது போன்ற கனவு வந்தது. அச்சம் அடைந்து கலங்கி எழுந்த அவரை வானில் பறந்து சென்று கொண்டிருந்த, வாழ்வின் அனைத்து சுகங்களையும் துறந்து விட்டு துறவியாக மாறிய அவருடைய சகோதரி நந்தா (*Nanda*) என்பவள் சந்தித்தாள். அவள் கூறினாள் "போலி பிட்குக்கள் கூறியதைக் கேட்டு நீ மாபெரும் தவறை செய்து விட்டாய். உண்மையான பிக்குக்களை அடையாளம் கண்டு கொள். அவர்களுடைய பக்கம் நீ இருந்து கொண்டு அவர்களுடைய நியாயத்தை நிலை நாட்டினால் நீ ஆசிர்வதிக்கப்படுவாய் ". இப்படியாக கூறி விட்டு மீண்டும் மறைந்து போனாள்.

மறுநாள் காலை எழுந்த உடன் அந்த மன்னன் வைசாலிக்கு புறப்பட்டுச் சென்று அங்கு கூடி இருந்த பிக்குக்களை சந்தித்து இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பின் நியாயம் எந்த பக்கம் உள்ளது என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டான். அதன் பின் அவர்களிடம் 'உண்மையான போதனா வழியை உணர்ந்து கொண்டேன். அதை மேலும் பரப்ப என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யுங்கள். அதற்கு என்னுடைய முழு ஆதரவும், உதவிகளும் அதற்கு உண்டு' என அறிவித்தப் பின் தன்னுடைய தலைநகருக்கு திரும்பிச் சென்றான். அதன் பின் இரு தரப்பினரும் ஒரு இடத்தில் கூடி அனைத்து கருத்துக்களையும் விவாதித்தனர். தேவையற்ற விவாதம் தொடர்ந்து கொண்டு இருக்கையில் அங்கு திடீர் என வந்த தேரா ரேவதா அவர்களுடைய சர்ச்சைகளை

நிறுத்துமாறுக் கூறிய பின், தான் அதற்கு ஒரு நல்ல தீர்ப்பை நடுவர் மூலம் தெரிவிப்பதாகக் கூறினார். அந்த ஏற்பாட்டின்படி அவர் கிழக்குப் பகுதியை சேர்ந்த சுப்பகாமி, சல்ஹா, குஜ்ஜசோபிதா மற்றும் வாசபாகமிகா என்ற நான்கு பிக்குக்களையும் (*Sabbakami, Salha, Khujjasobhita, and Vasabhagamika,)*, பாவாவை சேர்ந்த ரேவதா, சனசம்புதா, காகண்டகாவின் புதல்வாரன யாசா மற்றும் சுமனா என்ற (*Revata, Sänasambhüta, Yasa, the son of Kakandaka, and Sumana*) நான்கு பிக்குக்களையும் கொண்ட குழு ஒன்றை அமைத்து அந்த பிரச்சனைக்கு முடிவு காணுமாறு கூறினார். அவர்களை அழைத்துக் கொண்டு அனைத்து ஆசைகளையும் துறந்திருந்த (அசவா) எட்டு தேராக்கள், வாலிகாரமா (*Valikarama*) என்ற பகுதியில், அஜிதா (*Ajitha*) என்பவர் ஏற்பாடு செய்து இருந்த அமைதியான, யாருமற்ற இடத்திற்குச் சென்று அமர்ந்தனர். அங்கு வந்திருந்த அனைத்து பிட்குக்களின் மன நிலையையும் நன்கு உணர்ந்திருந்த மூத்தவரான தேரா ரேவதா, முதலில் சுப்பகாமியிடம் விவாதத்திற்குறிய பத்து கட்டளைகள் பற்றி அடுக்கடுக்காக கேள்விகள் கேட்டார். அவற்றை எல்லாம் கேட்ட தேரா சுப்பகாமி கூறப்பட்ட அனைத்து முறைகளும் தவறான போதனா வழிமுறைகள், அவைகள் ஐதீகத்திற்கு எதிரானவை என தன் தரப்பு வாதத்தை எடுத்துறைத்தார். இப்படியாக ஒன்றின் பின் ஒன்றாக விவாதத்திற்குறிய பத்து கட்டளைகளையும் பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டு பதில்கள் பெறப்பட்டன. முடிவில் மாறுபட்ட கருத்துடைய பத்தாயிரம் பிட்குக்களால் கடை பிடிக்கப்பட்டு வந்த வழிமுறைகள் தவறானவை என்ற தீர்மானம் ஏற்கப்பட்டு தேரா சுப்பகாமியை தலைவராக நியமித்தனர். அவர் நூற்றி இருபது ஆண்டுகள் தலைமை பதவியில் இருந்தார். தேரா

அனந்தாவின் சீடர்களாக சுப்பகாமி , சல்ஹா (*Salha*), ரேவதா, குஜசோபிதா (*Khujjasobhita*), காகன்டகாவின் மகன் யாசா, சம்புத்த சானவாசிகா (*Sanavasika*) மற்றும் ஆறு தேராக்கள், இருந்தனர். ஆனால் தேரா அனுருத்தாவின் (*Anuruddha*) சீடர்களாக வாசபகாமிகா (*Vasabhagamika*) மற்றும் சுமனா (*Sumana*) என்ற இருவரும் இருந்தனர். இப்படியாக தாடகதாவின் வழிமுறையை முறையாக ஏற்று நடந்து வந்த அந்த எட்டு தேராக்களுடன் நூற்றிப் பன்னிரண்டாயிரம் *(112,000)* புத்த பிட்குக்கள் மீண்டும் ஒன்றிணைந்து தேரா ரேவதாவை தலைவராக ஏற்றுக் கொண்டனர். அதைத் தொடர்ந்து புத்தருடைய போதனா முறைகள் காலம் காலமாக நன்கு வளர்ந்திட அதாவது – அனைத்தையும் தெளிவாக அறிந்து கொள்ளுதல், புத்தர் போதித்த அனைத்தையும் முறைபடி புரிந்து கொள்ளுதல், பாஷ்யங்களைப் பற்றி அதி நுட்ப கருத்துரை வழங்குவோர், மற்றும் விவாதங்களை எதிர் கொண்டு வாதம் செய்வோர் - , பாடிசம்பிதா (*patisambhida*) என்ற நான்கு வழிகளில் வல்லுனர்களான எழுநூற்று பிட்குக்கள் *(700)* தம்மாவான சம்கரசாடகானத்தை (*Samkhatasarakattam*) தொகுத்து வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

காலசோக (*Käläsoka*) மன்னனின் ஆட்சியில் இருந்த வாலிகராமாவில் (*Valikarama*), தேரா ரேவதாவின் தலைமையில் கூடியவர்கள் எட்டு மாதத்தில் அவற்றை விவாதித்து ஏற்கனவே ஏற்கப்பட்டு இருந்த தம்மா என்ற சம்கரசாடகானத்தை முறைப்படி மீண்டும் உறுதி செய்தனர். நமக்கு நற்போதனை செய்த புத்தரும், அவருடைய மூன்று முக்கிய கட்டளைகளான சிற்றின்பம், உலக ஆசைகள் போன்றவற்றை விட்டொழித்து பற்றற்று வாழ்ந்திருத்தலை

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

-36-

குடைபிடித்தபடி இருந்தவாறு உலக நன்மைக்கு பாடுபட்ட அனைத்து பிட்குக்களும் நம் வணக்கத்திற்குறியவர்கள்.

இப்படியாக புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த நான்காம் பாகமான 'இரண்டாம் ஆலோசனை சபை' முடிவுற்றது.